"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2012-ம் ஆண்டு ஜூன் திங்கள் 29-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 12.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்

## <u>அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

**<u>1 ) ம.பொ.4/07311/12</u>**

மதுரை மாநகரில் தற்போது தனியார் பேருந்துகள் பெரியார் பேருந்து நிலையம் எதிர்ப்புறத்தில் உள்ள வணிக வளாக பேருந்து நிறுத்துமிடத்திலிருந்து இயக்கப்பட்டு வருகிறது. இதனால் இப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதோடு, பேருந்தில் பயணம் செய்பவர்களும் அதிக சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். போக்குவரத்து நெரிசல்களை குறைப்பதற்கு தனியார் பேருந்துகளை இயக்கும் உரிமையாளர்களுக்கு தற்போது மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 11 ஏக்கர் நிலப்பரப்பில் தனியார் பேருந்துகள் நிறுத்துமிடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பேருந்துகள் நிறுத்துமிடத்தில் தனியார் பேருந்து நிலையத்திற்கு தேவையான நிறுத்துமிடங்கள் (Bus Bays),பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள், பேருந்து இயக்குவதற்கான வசதிகள் மேலும் பேருந்து நிலையத்திற்கு உரிய உளகட்டமைப்புகள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படுகிறது.

தற்போது மேற்படி தனியார் பேருந்துகளால் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசல்களை உடனடியாக மாற்றுவதற்கு மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள மாநகராட்சி இடத்தில் தனியார் பேருந்துகள் நிறுத்துவதற்கு தேவையான அடிப்படை உள்கட்டமைப்புகளை தற்காலிகமாக ரூ. 1.00 கோடியில் ஏற்படுத்தி மேற்படி தனியார் பேருந்துகள் வணிக வளாக பேருந்து நிலையத்திலிருந்து மாற்றுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.206</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**<u>2 ) ம.வ.1/4454/2005</u>**

மதுரை மாநகராட்சிப் பகுதியில் ஒவ்வொரு வருடமும் வெயில் காலங்களுக்காக பொதுமக்கள் நன்மையை கருதி மார்ச் மாதம் முதல் ஜூன் மாதம் முடிய கடைகள் முன்பு போடப்படும் வேனல்பந்தலுக்கு மாதம் ரூ. 50/- வீதம் நான்கு மாதங்களுக்கு ரூ. 200/- என நிர்ணயம் செய்து வணக்கத்திற்குரிய மேயர் அவர்களது முன் ஒப்புதல் நாள் : 08.03.2004– ன்படி 2010–2011ம் ஆண்டு வரை வசூல் செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் தற்போதைய விலைவாசி உயர்வுகளை கருத்தில்கொண்டு மாநகராட்சியின் வருவாய் பெருக்கும் நோக்குடன் ஏற்கனவே மாதம் ஒன்றுக்கு ரூ. 50/- என நிர்ணயிக்கப்பட்ட தொகையிலிருந்து தற்போது 2012–12ம் ஆண்டிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 100/-ஆக உயர்த்தி நிர்ணயம் செய்யலாம் எனபதற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்ட மேற்கண்ட கட்டணம் வசூல் செய்யவும், பட்டா நிலங்களிலும் வழிபாட்டு தளங்களிலும் நடத்தப்படும் திருவிழாக்களுக்கு மூன்று நாட்களுக்கு வேனல் பந்தல் இலவசமாக அமைத்துக்கொள்ள, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களது 08.03.2012ம் தேதி முன் ஒப்புதல் பெறப்பட்டதை பின்னேற்பு செய்து மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>நிபந்தனைகள் :</u>**

1. வேனல் பந்தல் போடும் பொழுது சாலைக்கோ / நடைமேடைக்கோ பழுது ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும்.
2. மேற்படி இடத்தில் தற்காலிக ஆக்கிரமிப்பு இருக்கக்கூடாது.
3. பாதசாரிகளுக்கும் போக்குவரத்திற்கும் எவ்விதமான இடையூறும் ஏற்படுத்தக்கூடாது.
4. இலவச அனுமதி குறிப்பிட்டுள்ள மூன்று நாட்களுக்கு மேல் இருத்தல் கூடாது. மேற்படி மூன்று நாட்கள் முடிந்ததும் உடனடியாக அகற்ற வேண்டும்.
5. போக்குவரத்து காவல் துறை மற்றும் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனை ஏதேனும்

வரப்பெற்றால் உடனடியாக முன்னறிவிப்பின்றி அகற்றப்படும்.

6. எளிதில் தீப்பிடித்திடாத பந்தல்கள் போடப்பட வேண்டும்.

**மாமன்றத்தீர்மானம் எண்.207**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3 ) ம.நி.4/33566/2011(CW1)**

மதுரை மாநகராட்சி உள்ளாட்சி தேர்தல் 2011–ன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து (100–வார்டு) மாமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்கள் வார்டு சம்பந்தப்பட்ட பணி நிமித்தம், அலுவலக உபயோகத்திற்காக பயன்படுத்தும் வகையில் மாநகராட்சி பொதுநிதியிலிருந்து 100 கைபேசிகள் (Handset) மற்றும் சிம்கார்டுகள் (SIMCard) MTS-நிறுவனத்தாரிடமிருந்து வாங்குவதற்கும், அதற்கான மாதாந்திர கட்டணத்தை மதுரை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்துவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.208**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) B4/15702/01**

மதுரை மாநகராட்சியில், 2010-11,2011–12–ஆம் ஆண்டுக் கணக்குகள் முடிப்பதற்கு நான்கு மண்டல அலுவலகங்களிலும் உரிய பதிவேடுகள், வங்கி இணக்கச் சான்றுகள் மற்றும் இதரப் பட்டியல்கள் தயார் செய்வதற்கு அனுபவமிக்க பணியாளர்கள் இல்லாததால், மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கும், மாநில கணக்காயரால் (AG Audit) எழுப்பப்படும் தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்வதற்கும், பணியாளர்குழு ஊதிய பரிவர்த்தனைகள், ஓய்வூதியப் பலன்கள் அனுமதித்தல், ஓய்வூதிய பிரேரணையில் எழும் குறைபாடுகளை அவ்வப்போது நிவர்த்தி செய்ய ஆலோசனை வழங்குவதற்கு உள்ளாட்சி நிதி தணிக்கை துறையில் துணை இயக்குநர் பணியிடத்தில் ஓய்வுபெற்ற தி.ரு.சிவ.ஜெயபால் அவர்களை ஆலோசகராக, மாமன்ற தீர்மானம் எண்.942, நாள்:30.07.2010–ன்படி நியமிக்கப்பட்டார். அன்னாரின் பணியிடம் ஓராண்டு அடிப்படையில் நீட்டிக்கப்பட்டு, நீட்டிப்பு காலம் வருகின்ற 31.07.2012 அன்று நிறைவடைகிறது. அன்னாருடைய பணி தொடர்ந்து தேவைப்படுவதால் மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.209**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்..) வி.வி.ராஜன்செல்லப்பா**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**நாள் : 29.06.2012**
**மதுரை.**

* * * * * * * *

**<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு</u>**
**<u>வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள்</u>**
**<u>நன்றி தெரிவிக்கும் தீர்மானம் –1</u>**

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம்

புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள்

தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன்,

இந்தியாவின் அனைத்து துறைகளிலும், முன்னேறிய முதல் மாநிலமாக தமிழகத்தினை உயர்த்திட, தொலைநோக்குப் பார்வையோடு, எளிமையாகவும், வேகமாகவும், செயல்படுத்தி பொற்கால புனித ஆட்சியை தமிழக மக்களுக்கு வழங்குவதோடு மட்டும் அல்லாமல், இந்திய துணைக்கண்டத்தின் சார்பாக தமிழக முதல்வர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சிதலைவி **அம்மா** அவர்கள், மேதகு இந்திய குடியரசுத் தலைவர் தேர்தலில் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மரியாதைக்குரிய **P.A.சங்மா** அவர்களை வேட்பாளராக அறிவித்து முத்திரை பதித்த மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களுக்கு இம்மாமன்றம் தனது மனப்பூர்வமான நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**மேயர்**

**<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு</u>**
**<u>வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள்</u>**
**<u>நன்றி தெரிவிக்கும் தீர்மானம் –2</u>**

100–க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் 500-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட இன மக்கள் மற்றும் பிற சமுதாயத்தை சார்ந்த மொத்தம் 1006 ஜோடிகளுக்கு ஒரே மேடையில் தாலிக்கு 4–கிராம் தங்கம் மற்றும் அனைத்து சீர்வரிசைகளுடன் தாய் உள்ளத்தோடு சிறப்பாக திருமணங்களை நடத்தி வைத்த மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களுக்கு இம்மாமன்றம் தனது மனப்பூர்வமான நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**மேயர்**